இந்துகலாபிவிருத்திச் சங்க இலவச வெளியீடு 5.

அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச்செய்த—10

# கதிர்காமத் திருப்புகழ்



இந்துகலாபிவிருத்திச் சங்கம்,
175, செட்டியார் தெரு
கொழும்பு.
விய ௵ வைகாசி.

சிவமயம்.

## அருணகிரிநாத சுவாமிகள்

## அருளிச் செய்த

# கதிர்காமத் திருப்புகழ்.

இந்துகலாபிவிருத்திச் சங்க

இலவசவெளியீடு—10,000

இந்துகலாபிவிருத்திச் சங்கம்,

175, செட்டியார் தெரு

கொழும்பு

பதிப்பாளர்:—S. C. சாமி & சன்ஸ்,

சௌகார் பேட்டை சென்னை.

விய ௵ வைகாசி ௴



செல்லாரங்கன் பிரஸ், *for* Q. H. M.S. *971*-C. 10,000-10-6 46.

சிவமயம்.

## அருணகிரிநாதசுவாமிகள் அருளிச்செய்த

# கதிர்காமத் திருப்புகழ்.

௧ தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதான.

திருமகளு லாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரள வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

௨ தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான தனதான.

அலகின் மாறு மாருத கலதி பூத வேதாளி
அடையிலெ ஞாளி கோமாளி அதிபார
அழுகல் கோழை நாணாது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகி
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மோதாரு வெனயாதும்

பரிவு ளூத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வெலை மாசூரி
லெறியும் வேலை மாளூத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேருவே தேவர் பெருமாளே.

௫ தனன தான நந்த தனதான தனன தான தத்த தனதான.

எதிரிலாதபத்தித'னமேவி இனியதாணிணைப்பையிருபோதும்
இதய வாரி திக்குள் றவாகி எனது ளேசி றக்க அருள்வாயே
கதிரகாமவெற்பிலுறைவோனே கனகமேருவொத்தபுயவீரா
மதுரவாணியுற்றகழலோனே வழுதிகூனிமிர்த்தபெருமாளே

௬ தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான.

கடகட வருவிகள் தபவரி யதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நககுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோடை
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே

# கதிர்காமத் திருப்புகழ்

இடமொரு மரகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மகமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.

௫ தனனதன தானத்த தனனதன தான
தனனதன தானத்த தனதான தானனா.

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலு லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவந்த பாசத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ருருக்கு மனுமான மாயைக்கு
முரியவர்ம காதத்தை யெனுமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்கிரு பாசித்தம் அருளகூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யநுபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவித்த முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபி ராமனே.

௬ தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றான் இருகூறாச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்

சிறைச்சே வல்பெற்றுய் வலக்கார முற்றுய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சேச கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனைக்
கரிக்கோ லவிட்டார் கணுக்கா னமுத்தே
கதிர்கா மமுற்ருர் முருகோனே.

எ தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதனா.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட்ட ரிதாய
சமயபே தத்தினுக் கணுகோ மெய்ப்பொ ருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னந்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்சொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியபூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிகூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிர்காம மக்கிரிப் பெருமாளே.

# கதிர்காமத் திருப்புகழ்

௮ தானதன தத்தத்த தானதன தத்தத்த
தானதன தத்தத்த தனதான.

பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே
பாகளவு தித்தந்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணிகு ழற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகனை கப்பட்ட வாசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி யுட்கிப்பு காமுதபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தின் இருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில் கப்பட்ட பெருமாளே.

௯ தனதன தத்த தனதன தத்த
தனதன தத்த தனதான.

மருவறு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முந்த முதிரயா மந்தி
னிரவினால் நித்த மெலியாதே
இடருறு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா

கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே லிட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே.

௰ தானதன தானத் தனதான தானதன தானத் தனதான.

மாதர்வச மாயுற் றுழல்வாரும் வாதவமெ ணுமற் றிரிவாரும்
நீதகல வோதிப் பணியாரும் நீரகமீதிற் றிகழ்வாரே
காதலொடுநாளி யேநற்குணசீலாநாரியிருவோரைப்புணர்வேலா
சோதிசிவஞானக்குமரேசாதோமில்கதிர்காமப்பெருமாளே.

௧௧ தனன தான தான தத்த தனன தான தான தத்த
தனன தான தான தத்த தனதான.

மூதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
மூடிவி லாத தோர்வ டக்கில் எரியு மால மார்பி டத்து
முழுகி யேறி மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக நீடி சைக்கும்
விளைவி டாத தாய ருக்கு மழியாதே
விளையு மோக போக முற்றி யளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரித்த
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னத்தி களப மார்ப யோதரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை யருள்வோனே
அகில லோக மீது சுற்றி யசுரர் லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.